**கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் III செயற்திட்டம் - 2020**

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் III செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 16 ஆம் திகதிய (309) ஆம் மொத்த இலக்க பிபீசீ (2014) 15 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போதய நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கொழும்பு நகரப் பிரதேசத்தில் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக தெற்கு அதிவேகப் பாதையினையும் கொழும்பிலிருந்து ஆரம்பிக்கின்ற ஏனைய தேசிய வீதிகளையும் இணைகின்ற வகையில் கொழும்பிற்கு வெளிச் சுற்றுவட்டத்தில் அதிவேகப் பாதைகளை நிர்மானித்தல் மற்றும் நாட்டின் ஏனைய பிராந்தியங்களுடன் இணைப்பினை மேம்படுத்துதல் அதன்மூலம், இலங்கையில் பிராந்தியங்களுக்கிடையே பொருளாதார அபிவிருத்தியை வலுப்படுத்துவதற்கு பங்களித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 76,200 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 590 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 63,356 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 494 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2014 ஆகஸ்ட் இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 யூன் மாதமளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. இருப்பினும், செயற்த்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2020 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 02 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளா் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்ட பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 1,984 மில்லியன் தொகையான ஓசீஎச்பி - I உடனான நடைமுறைக்கணக்கின் மிகுதி வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம் (கட்டம் I) 2015 இல் மூடப்பட்டதனாலான பற்றாக்குறையான ஆவணச்சான்றுகள் காரணமாக கணக்காய்வினால் உறுதிப்படுத்த முடியாமல் போகக்கூடும். | செயற்திட்ட அலுவலகமானது முழுமையாக மூடப்பட்டுள்ளதுடன் அனைத்துச் சொத்துக்களும் ஆர்டிஏவிற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. | அறிக்கையிடல் திகதியில் நிதிக்கூற்றுக்களில் சரியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை காட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 200 மில்லியனான ஒரு வித்தியாசம், 2020 ஆம் ஆண்டிற்கான மூடும் கணக்குகளின் பிரகாரமான ஒப்பந்ததாரரிற்கு செலுத்த வேண்டிய மிகுதிக்கும் கணக்காய்விற்கும் கிடைக்கப்பெற்ற தகவலிற்குமிடையே அவதானிக்கப்பட்டிருந்தது. | பிடிகாசானது ஒப்பந்ததாரரிற்கு முழுமையாக வழங்கப்பட்டிராததுடன் சில கொடுப்பனவுகள் பூர்த்தி செய்யப்படாத வேலைகளிற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒப்பந்ததாரரிற்கு செலுத்த வேண்டிய மிகுதியை செயற்திட்டத்தின் ஏனைய தகவல்களுடன் இணக்கஞ்செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் நிர்மான வேலைகளிற்கான ஒப்பந்தம் ரூபா 66,690 மில்லியன் கிரயத்தில் 2013 பெப்ரவரி 21 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் வீதி நிர்மான வேலைகள் 16 மாதங்கள் தாமதத்துடன் 2016 சனவரி 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. வீதி நிர்மான வேலை 2019 ஜூன் 13 இல் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தும், தளத்தின் உரிமையினை கையளிப்பதில் தாமதம் காரணமாக 2019 திசெம்பர் 10 வரை 180 நாட்களினால் நிடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலையானது ரூபா 1,417 மில்லியன் பெறுமதியான முக்கியமான அடிப்படை வேலைகளை பூர்த்திசெய்யாமல் 2019 நவம்பர் 09 இல் பொதுமக்களிற்காக திரக்கப்பட்டது. செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் செயற்திட்டத்தின் இறுதியில் இலக்கிடப்பட்ட செயலாற்றல் 100 சதவீதத்திற்கு எதிராக 95 சதவீதமாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடன் ஒதுக்கீட்டின் ஐ.அ.டொலர் 494 மில்லியனில் ஐ.அ.டொலர் 115.49 மில்லியன் கடன் காலாவதியாவதற்கு முன்னர் செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்படாமலிருந்தது. மேலும், ஒப்படைப்பு கட்டணங்கள் ரூபா 91.63 மில்லியன், ரூபா 87.28 மில்லியன் கொடுப்பனவின் தாமதத்தின் மீதான வட்டி மற்றும் நாணயமாற்று நட்டம் 9,308.22 மில்லியன் என்பன கடனின் முடிவுறுத்திகதியின் முடிவில் கடனின் மீது சாட்டப்பட்டிருந்தது. இருப்பினும், பிடிகாசு உள்ளடங்களாக ஒப்பந்ததாரரிற்கு செலுத்த வேண்டிய கூட்டு மொத்தம் ரூபா 765.49 மில்லியன் 2021 மார்ச் 26 இல் உள்ளவாறு கூட தீர்க்கப்படமுடியாமலிருந்தது. | எக்ஸிம் வங்கி கடனானது 5 வருடங்களின் பின்னர் 2019.12.03 இல் காலாவதியாவதே பிரதான பிரச்சினையாக காணப்பட்டது. ஆனால் அரசியல் காரணங்களினால் எங்களால் 2015 ஆம் ஆண்டில் கடனை பயன்படுத்தமுடியாமலிருந்தது. கடன் தொகையானது ஐ.அ.டொலர் 494.04 மில்லியனாக இருக்கின்றதுடன் கடைசி திகதி வரை எங்களால் ஐ.அ.டொலர் 378.54 மில்லியனை மாத்திரமே மீளப்பெறமுடியுமாகவிருந்தது. | செயற்திட்டத்தின் கடன் வசதிகள் காலாவதியாவதற்கு முன்னர் மொத்த கடனை பயன்படுத்த நிர்மான வேலைகள் முறையாக திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் மொத்த கடன் மதிப்பீடானது சரியாக தயாரிக்கப்பட்டிராததுடன் அளவைப்பட்டியலிலுள்ள ரூபா 2,506 மில்லியன் பெறுமதியான 64 உருப்படிகள் ஒப்பந்ததாரரினால் முழுமையாக எட்டப்படாததுடன் அளவைப்பட்டியலிலுள்ள ரூபா 3,721 மில்லியன் பெறுமதியான 11 உருப்படிகளின் நிர்மான வேலை 50 சதவீதத்திற்கும் குறைவாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | மொத்த பீஓகியுவ் (BOQ) தொகையும் பயன்படுத்தப்படாத ஏனைய 62 உருப்படிகள் காணப்படுகின்றன. ஆனால், ஒவ்வொன்றிற்குமான மற்றும் இவ் உருப்படிகளின் சேமிப்புக்களிற்குமான தெளிவான காரணம் ஒன்று காணப்படுகின்றது. | செயற்திட்டத்தின் மொத்த கிரய மதிப்பீடு செயற்திட்டத்தின் தொடர்புடைய பொறியியலாளர் கற்கைகள், மணல் பரிசோதனை, வடிவமைப்பு மற்றும் பீஓகியுவ் அளவுகள் போன்றவற்றினை ஏற்றகொள்வதனூடாக சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | செயற்திட்டமானது ரூபா 3,961 மில்லியனை அளவைப்பட்டியலிலுள்ள உருப்படி இல 10.12 இற்கான ரூபா 1,500 மில்லியன் ஏற்பாட்டிற்கு எதிராக மிதமான செயற்பாடுகளிற்காக ஏற்படுத்தியிருந்தது. | மிதமான செயற்பாடுகள் அல்லது அடித்தளமிடல் வேலைகள் போல் வேலைகளை செய்வதற்காரம்பிப்பதற்கு முன்னர் உண்மையான கிரயத்தினை தீர்மானிக்க அல்லது மதிப்பிட யாராலும் முடியாது. | மிதமான செயற்பாடுகளிற்கான ஏற்பாடு செயற்திட்டத்தின் உரிய வீதி பிரிவுகளிற்கான விபரமான பொறியியலாளர் கற்கைகள், மணல் பரிசோதனை மற்றும் வடிவமைப்பு என்பன செய்து முடித்ததன் பின்னரே செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஒப்பந்தத்திற்காக வழங்கப்பட்ட நாணயங்களின் விகிதாசாரம் ஐ.அ.டொலரில் 65 சதவீதமாகவும் இலங்கை ரூபாவில் 35 சதவீதமாகவும் இருந்தும், செயற்திட்டமானது வேலைப்பரப்பு மாற்றம் மற்றும் ஒப்பந்த கையளிப்பின் போது அடையாளப்படுத்தப்பட்டிராத மேலதிக வேலைகள் என்பன காரணமாக ஐ.அ.டொலரில் 65 சதவீதமான பங்கிற்கும் மேலாக 51 தடவைகள் அனுமதித்திருக்கின்றது. அதன் பெறுபேறாக, ரூபா 72.6 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 566,276 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | வேலைப்பரப்பு மாற்றங்கள் மற்றும் மேலதிக வேலைகள் என்பன ஒப்பந்த கையளிப்பு கட்டத்தில் அடயாளப்படுத்தப்படவில்லை என கூறமுடியாது. வேலைப்பரப்பானது அரசியல் காரணங்கள் காரணமாக வேண்டுமென்றே திருத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரர் பட்டியல்களின் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பங்குகள் ஒவ்வொரு தரப்பினரினாலும் சரியாக உடன்பட வேண்டியதுடன் ஒப்பந்த நிபந்தனையிலும் உள்ளடக்கப்படல் வேண்டும். |

## 3.3 காணி சுவீகரிப்பு மற்றும் மீள வழங்கள் மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| கிடைத்திருக்கும் தகவலின் பிரகாரம், வத்தளை மற்றும் மஹர பிரதேச செயலகங்களின் கண்காணிப்பின் கீழுள்ள பகுதிகளில் 293 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 1705 காணித்துண்டுகள் வீதி நிர்மான நோக்கத்திற்காக செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 9,308.22 மில்லியன் தொகையான இழப்பீடு 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் மீது செலுத்தப்பட்டுமிருந்தது. ரூபா 1,082.77 மில்லியன் தொகையான வட்டி இழப்பீட்டு கொடுப்பனவுகளை தீர்ப்பதில் தாமதத்தின் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், 423 காணித்துண்டுகளின் உரிமைத்துவம் மாத்திரமே வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. | முழு ஒப்பந்த காலப்பகுதியின் பொதும் பாதிக்கப்பட்ட மக்களிற்கு இழப்பீடுகளை வழங்குவதில் ஒரு தாமதம் காணப்பட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்கள் பிரிவு 17 இன் கொடுப்பனவுகளின் தாமதத்திற்கான பாதிக்கப்பட்ட மக்கள் ஒரு வட்ட கொடுப்பனவிற்கு உரித்துடையவர்களாக காணப்படுகின்றனர். கொள்வனவு செய்யப்பட்ட காணிகளின் உரிமையினை ஆர்டிஏவிற்கு மாற்றுவதற்கு அல்லது பிரிவு 44 அறிவித்திலினை வழங்குவதற்கு ஓர் தாமதம் காணப்பட்டதனை உடன்பட்டனர். பிரிவு 44 அறிவிப்பினை வழங்குவதற்கான நடைமுறையினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காணி கொள்வனவு நடவடிக்கையினை துரிதப்படுத்தவும் காணிகளை காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 குறைவாக பயன்னபடுத்தப்பட்ட வளங்வள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| உஸ்வெடகெயாவ காணிக்கான ரூபா 15.85 மில்லியன் தொகையும் மற்றும் மாபொல காணிக்காக ரூபா 47.55 மில்லியனும் முத்துராஜவலவிலுள்ள வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டத்தில் இடமாற்றப்பட்ட மக்களின் மீளவழங்களிற்காக 2019 ஜூலை இல் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், இவ் இரு காணிகளும் 2021 பெப்ரவரி 25 இல் உள்ளவாறு கூட மீளவழங்கள் நடவடிக்கைகளிற்காக செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்படாமலிருந்தது. | செயற்திட்டமானது 2020.12.31 இளவில் மூடப்பட்டடிதனால், இக் காணிததுண்டுகள் மேலும் இச்செயற்திட்டத்திற்கு தேவையற்றதாகும். | செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு மற்றும் மீளகுடியமர்த்தல் நடவடிக்கைகள் செயற்திட்ட நட்டங்களை குறைக்க முறையாக திட்டமிட்டு அமுல்படுத்தப்படல் வேண்டும். |

## 3.5 சுற்றுசூழல் விசயங்களுடன் தொடர்புபட்ட விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 735 ஆனதுடன் அதில் 643 முறைப்பாடுகள் ஒப்பந்ததாரரினால் தீர்க்கப்பட்டிருந்தது. அதன்படி, 09 முறைப்பாடுகள் 2020 ஆம் ஆண்டின் முடிவிலுள்ளவாறு தீர்க்கப்படாமலிருந்தது. | கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 735 ஆகும். அவைகளில் 643 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டிருந்தன. | ஒப்பந்ததாரரின் காப்புறுதி கோட்பாட்டு செல்லுபடியாகும் காலத்திற்குள் அனைத்து முறைப்பாடுகளையும் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |